கோரிக்கை		(ரூபாய்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
33	நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	10,07,93,119	..	..
40	ஊரக வளர்ச்சித் துறை	5,46,60,590	..	..
43	சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை	..	8,75,394	..
47	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	..	17,85,000	..
	பெருமொத்தம்	**15,54,53,709**	**36,88,230**	**..**

9. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஒ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2004–2005, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2004–2005 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Clause (1) of Article 205, read with Clause (3) of Article 203 of the Constitution of India, I, Dr. K. Rosaiah, Governor of Tamil Nadu, hereby recommend to the Tamil Nadu Legislative Assembly, to make grants for the Demands in respect of the amount spent on certain services and purposes during the financial year 2004–2005 in excess of the amount authorised or granted for those services and purposes for that year."

18. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 2004–2005, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2004–2005 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2004–2005 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 29–9–2015 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 2004–2005 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்காக அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

நிறைவேற்றப்பெற்ற 2004-2005 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை		(ரூபாய்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
14	சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை	1,40,29,588	..	..
19	உயர்கல்வித் துறை	..	43,51,101	..
20	நெடுஞ்சாலைகள் துறை	..	..	440
21	உள்துறை — காவல்	..	..	2,16,043
22	உள்துறை— தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்	..	999	..
33	நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	10,72,425	..	..
36	மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை	37,50,993	..	..
	பெருமொத்தம்	**1,88,53,006**	**43,52,100**	**2,16,483**

9. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஓ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 2015 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.